**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.450** **நாள் : 06.12.2023**

**தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் கனமழை மற்றும் மிக்ஜாம் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீரான மின் விநியோகம், குடிநீர், பால் பாக்கெட், பால் பவுடர் உள்ளிட்ட உணவுப் பொருட்கள் விநியோகம் மற்றும் மழைநீர்த் தேக்கம் அகற்றுதல் உள்ளிட்ட களப்பணி நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ரிப்பன் கட்டட கூட்டரங்கில் நடைபெற்றது.**

இன்று(6.12.23) தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் கனமழை மற்றும் மிக்ஜாம் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீரான மின் விநியோகம், குடிநீர், பால் பாக்கெட், பால் பவுடர் உள்ளிட்ட உணவுப் பொருட்கள் விநியோகம் மற்றும் மழைநீர்த் தேக்கம் அகற்றுதல் உள்ளிட்ட களப்பணி நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ரிப்பன் கட்டட கூட்டரங்கில் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாநகராட்சிப் பகுதியில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயலின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேங்கியுள்ள மழை நீரை அகற்றுதல், சாய்ந்துள்ள மரங்களை அகற்றி தடையற்ற போக்குவரத்துகான பணிகளை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட களப்பணி நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும்.

பால் பாக்கெட், பால் பவுடர் தடையின்றி மக்களுக்கு அதிகாலையில் கிடைப்பதற்கு உரிய ஏற்பாடுகளுடன் அனைவருக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கும் தரமான உணவுகளையும், நிவாரணப் பொருட்களையும் வழங்கிட வேண்டும்

மின் இணைப்பு வழங்கப்படாத பகுதிகளில், மின்மாற்றிகள் உள்ள இடத்தில் தேங்கியுள்ள மழைநீரை உடனடியாக அகற்றி மின்விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகளை தனி கவனத்துடன் உடனடியாக செய்து மின்விநியோகம் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும் மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளில் உள்ள மக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்கிட வேண்டும். மேலும் குழாய்கள் மூலம் தடையில்லாமல் குடிநீர் வழங்குவதை உறுதி செய்திட வேண்டும் லாரிகளின் மூலம் குடிநீர் விநியோகம் அனைத்து பகுதிகளுக்கும் மேற்கொண்டு மக்களுக்கு

வழங்கிட வேண்டும் மழைநீர் செல்லும் பாதைகளிலும் கழிவுநீர் பிரதான குழாய்களிலும் நீர்வழி தடங்களிலும் உள்ள அடைப்புகளை அகற்றி தடையின்றி மழைநீர் மற்றும் கழிவுநீர் செல்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்..

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் அனைத்து மீட்பு நடவடிக்கைகளும் அது தீவிரமாக மேற்கொண்டு மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு வழி செய்திடும் வகையில் சிறப்பாகப் பணியாற்றிட வேண்டும் என தெரிவித்தார்

இக்கூட்டத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் முதலமைச்சரின் செயலாளர்-I திரு.ந.முருகானந்தம், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அவர்கள்,உள்துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி.பெ.அமுதா, இ.ஆ.ப. அவர்கள், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன் இ.ஆ.ப. அவர்கள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் .டி.ஜி.வினய், இ.ஆ.ப., அவர்கள்,ஆவின் மேலாண்மை இயக்குநர் டாக்டர்.சு.வினீத், இ.ஆ.ப., அவர்கள், காணொலிக்காட்சியின் வாயிலாக மண்டல கண்காணிப்பு அலுவலர்கள், மண்டல அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்

**.செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**